ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு, இன்று மாலையும், நாளை மாலையும் கணினி பயிற்சி வகுப்பு இருப்பதாக அறிவிக்கப்பட்டது. அனைத்து உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்ட கையடக்க கணினிக்கு சிம் கார்டு போடுவதற்கு, Jio company–ல் இருந்து வருவதற்கு காலதாமதமாவதால் அது வழங்கும்வரை, இன்றும் நாளையும், தற்காலிகமாக அந்தப் பயிற்சி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை அன்போடு பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27–8–2021), வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–50 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

23. மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

24. மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)